**தேதி :** 19.01.2026 **SC.No. :** **775/2023** PW :7 ஐயப்பன்

( எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளவாறுதான் போலீசார் விசாரணையிலும் சாட்சியம் அளித்துள்ளேன். எனது மாமாவிற்கு எனது மச்சான் மகேஷ் போன் செய்தார், போனில் தன்னை எதிரிகள் அவர்கள் வீட்டின் வழியாக போகும்போது ஏன் வேகமாக போகிறாய் என சொல்லி எதிரிகள் என் மச்சானின் கன்னத்தில் அடித்துவிட்டதாக சொன்ன விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது மாமா வீட்டிற்கும் எதிரிகளின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 மீட்டர் தூரம் இருக்கும். எதிரிகள் வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டில் உள்ள நபர்களின் பெயர் எனக்கு தெரியாது. எதிரி சுரேஷ் எனது மாமாவின் கன்னத்தில் இடது காதோரமாக காதுதோடு சேர்த்து வெட்டியதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். மற்றொரு வெட்டும் போது எனது மாமா சாமி கையால் தடுத்ததனால் அந்த வெட்டு அவரது தோள் பட்டையில் பட்டது என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள காயங்களை தவிர மாரிச்செல்வத்திற்கு வேறு காயங்கள் இல்லை என்றால் சரிதான். மாரிச்செல்வம் வெட்டும் போது மயங்கி விழுந்து விட்டார் என நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எதிரி ராமையா இரும்பு ராடை எடுத்து வந்து எனது மாமா சாமியின் தலையில் அடித்ததாக நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். சம்பவத்தை யாரெல்லாம் பார்த்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். சம்பவ

நாளில் என்னுடைய மனைவிக்கு தென்காசி அரசு மருத்துவமனையில் வைத்து குழந்தை பிறந்தது என்றால் சரிதான். என் மனைவியுடன் நான் மருத்துவனையில் சம்பவநாள் இருந்தேன் என்றால் சரிதான். ஆனால் சம்பவம் நடக்கும்போது சம்பவயிடத்தில் இருந்தேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அசா.1 என்னுடைய மாமா என்பதனால் நான் நேரில் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மாமாவும் , மச்சானும் இருச்சக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் என் மாமாவையும், மச்சானையும் தாக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.21 15:07:19 +0530

**தேதி :** 19.01.2026 **SC.No. :** **775/2023** PW :8 சௌந்தர்யா

( எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

அசா.7 ஐயப்பன் எனது கணவர். வழக்கின் 3 வது எதிரி ராமையா என் அப்பாவின் உடன் பிறந்த தங்கையை திருமணம் செய்த வகையில் மாமா உறவு முறை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட தேதியில் தென்காசி அரசு மருத்துவமனையில் குழந்தை பேறுக்காக நான் அட்மிட் செய்யப்பட்டிருந்தேன் என்றால் சரிதான். சம்பவத்தை குறித்து எனது கணவர் எனக்கு சொன்னதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ நாள் என் கணவர் என்னுடன் மருத்துவமனையில் இருந்தார் என்றால் சரியல்ல.சாப்பாடு கொடுத்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டார். என்னுடைய வீட்டிற்கும் எதிரியின் வீட்டிற்கும் சுமார் 1/2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். என் அண்ணன் மகேஷ், எனது சித்தப்பா முருகேசன், தாத்தா காளி ஆகியோர் மீது 3 வது எதிரி தாக்கியதாக செங்கோட்டை நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். எதிரிகள் மூவரும் எனது அண்ணன் கன்னத்தில் அடித்தார்கள் அப்போது என் அண்ணன் மகேஷ், எனது அப்பாவிற்கு போன் மூலம் சொல்லியுள்ளார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா, எனது கணவர் ஐயப்பன், மாரிச்செல்வம் ஆகியோர் எதிரிகள் வீட்டிற்கு போனார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட வாக்குமூலத்தை குற்றாலத்தில் உள்ள ஏட்டையாதான் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் படித்துக்காட்டி வாங்கினார்கள்.

எனக்கு எஸ்ஐ, ஏட்டு பதிவி விவரங்கள் தெரியும். என்னிடம் கையெழுத்து வாங்கும் போது எஸ்ஐ, இன்ஸ்பெக்டர் இல்லை என்றால் எஸ்ஐ இருந்தார் என்று நினைக்கிறேன். நான் கேள்விப்பட்டவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் தந்தையும், மாரிசெல்வமும் இருச்சக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்த காயத்தை பயன்படுத்தி பொய்யாக கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.21 15:07:27 +0530